# அரச சார்பற்ற நிறுவனங்கள் பற்றி ஆராய விசேட ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)
இலங்கையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் சகல வித நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி விசேட ஆணைக்குழு வொன்றினை ஜனாதிபதி பிரேமதாசா நியமித்துள்ளார். சுமார் 3000 உள்ளூர், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் இயங்கி வருகின்றன என்றவகையில் கொள்கைத்திட்டமிடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவொன்று கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்து இந்த விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மார்கழி (15 12 - 1990) சனிக்கிழமை ஓசை 290

## உள்ளூர் படைப்புக்கள் தலா 10 கொள்வனவு

(யாழ்ப்பாணம்)
தமிழீழத்தின் படைப்பாளிகள், எழுத்தாளர்களின் அச்சுப்பிரதிகள், கையெழுத்துப்பிரதிகள் போன்றவற்றில் பத்துப் பிரதிகளை விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கலைகலாசாரப் பிரிவினர் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

எனவே படைப்பாளிகள் பழைய, புதிய படைப்புக்கள் என்ற வேறுபாடின்றித் தமது படைப்புக்களில் பத்துப் பிரதிகளைக் (4ஆம் பக்கம் பார்க்க)

## அரசு அனுப்பிய விசர்நாய்க்கடி மருந்து

# 20 பேருக்கு மட்டுமே போதும்

# பிராணவாயு சிறிதும் இல்லை

### யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)
சத்திர சிகிச்சைக்கும், மூச்சுத்திணறலுக்கும் பயன்படுத்தும் பிராணவாயு முற்றாகத் தீர்ந்துபோய்விட்டதாகவும், வந்து சேர்ந்துள்ள விசர்நாய்க்கடி மருந்து இருபது பேருக்கு மட்டுமே போதுமானது எனவும் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் செல்வி புஸ்பா சண்முகம் நேற்று எமது நிருபருக்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் பிராணவாயுவிற்குரிய சிலிண்டர்கள் கொழும்புக்கு கப்பல் மூலம் அனுப்பப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் யாழ். போதனா வைத்தியசாலை மீளத் திறக்கப்பட்ட பின் மூன்று விசர் நாய்க்கடி நோயாளிகள் மரணமடைந்ததாகவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான விசர்நாய் கடித்த நோயாளிகள் இருக்கும் அதே வேளை இறுதியாக எமக்கு ஆயிரம் மில்லி லீற்றர் விசர் நாய்கடி மருந்து (ஏ.ஆர்.வி) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த தொகை மருந்து ஆக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வீரமரணம் 'நிதி'

விடுதலைப்புலிகள் மகளிர் அணியைச் சேர்ந்த போராளி 'நிதி' என்பவர் நேற்று வீர மரணம் எய்தினார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொண்டுள்ளனர்

## அரச நிதி ஒதுக்கீடு ஒரு மாதம் முன்னரே முடிவு!

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா மருத்துவமனைக்கு 1991 ஆம்ஆண்டுக்கு தேவையான மருந்துப் பொருட்களுக்காக 17 மில்லியன் ரூபாவை சுகாதார அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது.

மேற்படி ஒதுக்கீடு 1990 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டிலும் சுமார் ஒரு மில்லியன் ரூபா அதிகமாக இருந்த போதிலும் இந்த வருடத்தின் நிதி ஒதுக்கீடு ஒரு மாதத்தின் முன்னரே தீர்ந்துவிட்ட நிலையில் அடுத்த ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட மேற்படி தொகைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குத்தொடுவாய் பாடசாலைமீது விமானக் குண்டு வீச்சு

### ஒன்பது மாணவர்கள் காயம்!

(மணலாறு)
கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலை நேற்று முன்தினம் பி. ப. ஒரு மணியளவில் அவ்ரோ விமானத்தின் குண்டு வீச்சுத் தாக்குதலுக்குள்ளாகியது. ஒன்பது பாடசாலைச் சிறுவர்கள் காயமடைந்தனர்.

சி.யோகராணி (வயது 12), க. மங்களராணி (வயது 15), இ. பர்மலதா (வயது 13), ப. கண்ணன் (வயது 13), இ. கமலாம்பிகை (வயது 15), அ. அன்னலெஷ்மி (வயது 13), க. சிவநாத் (வயது 13), அ. யூட் (வயது14), ஆகியோரே காயமடைந்த மாணவர்களாவர்.

வேலுப்பிள்ளை வடிவேல் என்பவரது வீடும் முற்றாகச் சேதமடைந்தது.

## சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம்

## தாய், சேய் நலன் காக்க உதவும்படி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் தாய், சேய் நலன்களைப் பாதுகாக்கஉதவுமாறு சர்வதேச சிறுவர் பாதுகாப்பு நிதியத்திடம வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிக்கு தற்போது விஜயம் செய்துள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உயர் அதிகாரியிடம் இங்குள்ள கிளை அலுவலக அதிகாரிகள் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

கடந்த பல மாதங்களாக வடபகுதியில் தாய், சேய்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் நாட்டில் 81 போராளிகள் பொலிஸாரால் கைது

(சென்னை)
தமிழ்நாட்டில் நேற்று 81 தமிழ்ப் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனதமிழகபொலிஸார்தெரிவித்தனர் இவர்களில் 6 பேர் திருச்சியிலுள்ள மருத்துவ மனையில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் திரும்பவும் அங்கேயே பொலிஸாரின் காவலில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## வைத்தியக் காப்புறுதி

(கொழும்பு)
அரசாங்க ஊழியர்களுக்கான வைத்திய காப்புறுதித் திட்டம் அடுத்த வருடம் ஜனவரியில் இருந்து அமுல் படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஒவ்வொரு அரசாங்க ஊழியர்களிடமும் இருந்து 20 ரூபா அறவிடப்படும் என்றும், இந்தப்பணம் 60வயது வரை அறவிடப்படும் என்றும், இதன்படி அரசாங்க ஊழியர் ஒருவருக்கு 1 1/2 லட்சம் ரூபா வரைமருத்துவ காப்புறுதியாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உழவு இயந்திரம் மீது ஹெலிதாக்கு; மூவர் காயம்

(நல்லூர்)
கிளிநொச்சியில் உழவுஇயந்திரம் ஒன்றில் வேலைக்குச் சென்றுகொண்டிருந்த தொழிலாளர்கள் மீது 55ஆம் கட்டையடியில் நேற்று முன்தினம் காலை எட்டுமணியளவில் ஹெலிகொப்ரரில்இருந்து கண்மூடித்தனமான கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. உழவுயந்திரத்தில் பிரயாணம் செய்தவர்கள் இறங்கி ஓடி பாதுகாப்பைத் தேடிக்கொ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை, நெல்லியடி வங்கிகளில் பணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)
எதிர் வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இலங்கை வங்கி பருத்தித்துறை, நெல்லியடி ஆகிய கிளைகளில் சில ஒழுங்கு விதிகளின் படி பணக்கொடுப்பனவுகள் வழங்கப்பட இருக்கிறது.

பருத்தித்துறைவங்கிக்கிளையில் 17 ஆம் திகதி இது வரை பணமாக ஓய்வூதியத்தை பெறாத ஓய்வூதியர்களுக்கு 2000 ரூபா வீதம் முன்னுரிமை அடிப்படையில் பண இருப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 240 தபாற் பொதிகள் பருத்தித்துறைக்கு வந்தன

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறையில் தபாற் பொதிகள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டுள்ளது. இதில் 240 பொதிகள் வெளிநாட்டு உள்நாட்டு தபாற் பொதிகள் ஆகும். ஏனைய 30 பொதிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**டில்கா வாச் வேக்ஸ்**
**DILKA WATCH WORKS**

வாடிக்கையாளர்களுக்கு! எமது ஸ்தாபனம் மீண்டும் 404, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாகவும், மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட், பண்டத்தரிப்பிலும், ஆடியபாதம் வீதி கல்வியங்காட்டிலும் இயங்குகின்றன. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் 60 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள தொழிலாளர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B-1653)

**பட்டப்படிப்புக் கல்லூரி**

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரி கலை முதற் தேர்வு, விஞ்ஞான முதற் தேர்வுக்கு விண்ணப்பித்த சகல மாணவர்களையும் 16-12-90 ஞாயிறு காலை 10 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். பட்டப்படிப்புகள் கல்லூரி 148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (B/ 1726)

**விற்பனைக்கு**

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256A பருத்தித்துறை வீதி, நல்லூர். ''அரஸ்ஜவுளியகம்'' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (R/888)

**சலவைப் பவுடர்**

நுரைவளம் மிக்க மில்க்வைற் சலவைப் பவுடர் துணியின் நூலிழைகளினூடே செறிந்து துரிதமாக, அழுக்கை முற்றாக அகற்றி, பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது. 100 சிறிய அளவு பைக்கற் தரும் அன்பளிப்பு ஒரு லேஞ்சி.
-மில்க்வைற், யாழ்ப்பாணம். (B-1722)

உடனுக்குடன்
றோனியோ
செய்து கொடுக்கப்படும்
**தூயா அச்சகம்**
138, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(B-1715)

## வீரவணக்கம்

வீர ஜனனம் 28 - 09 - 1967



வீர மரணம் 23 - 11 - 1990

**விடுதலை வேங்கை**
**2ஆம் லெப். ஜேசு (மகேந்திரன்)**

ஈழப்போரில் இன்னுயிர் நீத்த
காளை பலருள் மாங்குள அழிப்பில்
களப்பலியாகிய இயேசு என்னும்
அஞ்சா நெஞ்சன் அருந்திறலாளன்
அமைதியே உருவாய்ப் பண்புடன் பழகும்
தோழனை நினைந்து அவன்வழி செல்வோம்.

பெற்றோர்,
உற்றார், உறவினர், தோழர்கள்
(B/1714)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**விவசாயபீடம்- கிளிநொச்சி**
**பதவி வெற்றிடம்**
**அமைய தொழிலாளி**

மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சை, விவசாய பீடம் - கிளிநொச்சி ஆராய்ச்சி நிலைய அலுவலகத்தில் 1990-12-18 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். இப் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் சகல விண்ணப்பதாரிகளும் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் நேரில் சமுகமளிக்கும்படிகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. கல்வித் தகைமைச் சான்றிதழ்
2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
3 தேசிய அடையாள அட்டை
4 கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரம்

கல்வித் தகைமை: 7ஆம் வகுப்பில் சித்தி.

வயது: 18 வயதிற்குக் குறையாமலும் 40இற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

சம்பளத் திட்டம்: நாளொன்றுக்கு ரூபா 55/- உம் படிகளும்

— பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1990-12-11 (B. 1708)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1991-03-07 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

தாவரவியல் / இரசாயனவியல் / பௌதிகவியல்/கணிதமும் புள்ளிவிபரவியலும் / விலங்கியல் - சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவி விரிவுரையாளர்.

**சம்பள அளவுத்திட்டம்:**

1. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 ; ரூபா 9,600 - 8.250- 11,600 மாதமொன்றுக்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 : ரூபா 8,000 - 5,250- 9 250/- மாதமொன்றுக்கு
3. உதவி விரிவுரையாளர் ரூபா 3,900/- (நிலையானது) மாதமொன்றுக்கு

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப படிவங்களும் விவரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ் - உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரையொட்டப் பெறற 23x10 ச.மீ. அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990-12-10.

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்**
## வரவு செலவுத் திட்டம் -1991

1991 ஆம் ஆண்டிற்குக் கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவீன விபரங்களையும் உள்ளடக்கிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் எழு நாட்களுக்கு யாழ்ப்பாணமாநகராட்சிமன்ற அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைககப்படுமென மாநகராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் [அத்தியாயம் 252] [21/] [பி] பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரபபடுகின்றது.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
12.12.90 (B/ 1723)

வி.பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ்ப்பாணக் கிளை**
**அங்கத்தவர்களுக்கான**
## அறிவித்தல்

சகல அங்கத்தவர்களும் 1991 ஆம் ஆண்டுக்கான தங்கள் அங்கத்துவத்தை 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பதாக புதுப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

செயலாளர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை
இல. 73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
1990-12-15 (B-1725)

**இன்று மீண்டும் ஆரம்பம்**

**A/L 90, 91, 92**
விஞ்ஞானம் · வர்த்தகம் - கலை
பிரிவுகளுடன்
O/L, Typing, Shorthand
Spoken English வகுப்புகளும்

**Bond Institutes**
58, A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(B: 1721)

## ஓராண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை மிரேஸ்**
**(இராஜலிங்கம் சதீஸ்குமரன்)**

தாயின் மடியில்: 27. 5. 1972
வன்னி மண்ணில்: 27. 12. 1989
திதி: 16. 12. 1990

வீரம் விளைந்த மண்ணில் பிறந்த வீரவேங்கை
விடுதலை வேண்டி வீறுகொண்டு புறப்பட்ட
தியாகவேங்கை
போரில் புறமுதுகு காட்டா புலி வீரன் சதீஸ்
தரணி மீதிலோர் அழியா காவியமாகினான்

மண் மீட்புக்காக 27 - 12 - 89 இல் செட்டிகுளத்தில் சமுகவிரோதிகளுடன் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த எங்கள் அன்புச் செல்வத்துக்கு வீர அஞ்சலி

''சதீஸ் இல்லம்''
சதீஸ்குமரன் வீதி,
வல்வெட்டித்துறை.
(R.920)

பெற்றோர், அண்ணா,
சின்னண்ணா, அக்கா,
அம்மாச்சி, நண்பர்கள்,
உறவினர்கள்

## சிந்தனைக்கு

உன் நற்பெயரை நீ மதித்தால்,
நல்ல பண்புடையவர்களுடனேயே இரு:
உறவுகொள். கெட்ட சகவாசத்தைவிடத்
தனிமையாய் இருப்பதே நலம்.

— ஜோர்ஜ் வாஷிங்டன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 15-12-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## திரைமறைவில் உருவாகும் புதிய உறவுகள்?

ஜே.வி.பி இயக்கத்தின் தற்போதைய தலைவரான சோமவன்ச அமரசிங்காவும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் சிலரும் சிறிலங்காவில் இருந்து தப்பி தென்இந்தியாவிற்கு ஓடிவிட்டதாக கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைச் சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சரான ரஞ்சன் விஜேரட்னாவும் உறுதிப் படுத்தியுள்ளார்.

ஜே.வி.பி. தலைவரும், உறுப்பினர்களும் இந்தியா சென்றுள்ளமை சிறிலங்கா அரசியலைப் பொறுத்து மிகவும் முக்கியமானதொரு அம்சமாகவுள்ள அதேவேளை ஜே.வி.பி. இயக்கத்தைப் பொறுத்து பாரியதொரு கொள்கை மாற்றமுமாகும்.

சிறிலங்கா இராணுவத்தால் கொலை செய்யப்பட்டவரும், முன்னாள் ஜே.வி.பி. இயக்கத் தலைவருமான ரோகண விஜேவீரா ஜே.வி.பி. இயக்கத்தை ஸ்தாபித்தபோது அதன் அடிப்படை கொள்கையில் ஒன்றாக இந்திய எதிர்ப்புவாதமும் இருந்தது. ரோகண விஜயவீராவின் ஐந்து பிரதான விரிவுரைகளில் ஒன்று இந்திய ஏகாதிபத்தியம் பற்றியதாகும்.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சி இந்தியாவின் உதவியுடன் அடக்கப்பட்டு ரோகண விஜயவீர சிறையில் அடைக்கப் பட்டார். ஆனால் 1977 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைத் தொடர்ந்து ரோகண விஜயவீரா விடுதலை செய்யப் பட்டாலும் அவர் அரசியலில் முதன்மை பெற எடுத்த முயற்சிகள் தோல்வி அடைந்தன என்றே கூறலாம். ஆகையால் ஒரு தசாப்தமளவில் ஜே.வி.பியின் செயற் பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருந்து வந்தன.

ஆனால், 1987 இல் இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இந்திய இராணுவம் வட-கிழக்கு வந்ததும் இந்திய எதிர்ப்புவாதம் ஒன்றைக் கொண்டே அரசாங்கத்திற்கெதிரான ஒரு பெரும் சக்தியை வளர்த்தெடுத்தார். அதாவது தமது அடிப்படை கோட்பாடுகளில் ஒன்றான இந்திய எதிர்ப்புவாதத்தின் மூலமே தனது அரசியலை வளர்த்தெடுத்தார்.

இவ்வாறாக, இந்திய எதிர்ப்புவாதத்தை அடிப்படைக் கோட்பாடாகக் கொண்ட ஜே.வி.பியினர் இந்தியாவிற்கே சென்றுள்ளமை அவர்களிடம் ஏற்பட்டுள்ள ஒரு பெரும் கொள்கை மாற்றத்தின் விளைவு என்றே கூறுதல் வேண்டும். அத்தோடு இதற்கு இந்தியா பச்சை விளக்கு காட்டியும் இருத்தல் வேண்டும்.

ஜே.வி.பி. இயக்கம் ஆரம்பமாக்கப்பட்டதில் இருந்து அதற்கு சில ஆசிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகப் பேசப்பட்டு வந்தது. இதில் வட கொரியா, சீனா, ஈராக் போன்ற நாடுகளின் பெயர்கள் அடிபட்டன. ஆனால் ஜே.வி.பி. இயக்கத்தினரின் செயற்பாடுகள், அவர்களுக்கு பெரியளவில் வெளி உதவிகள் இருந்ததைப் புலப்படுத்தவில்லை. சிலவேளை சிறு தொடர்புகள் இருந்திருப்பினும், அந்த நாடுகள் இப்பிராந்தியங்களுக்கு வெளியில் இருந்தமையால் உதவிகள் கிட்டுவதில் சிக்கல்கள் இருந்திருக்கலாம். அல்லது அவ்வாறு வெளிவந்த செய்திகள் தவறானதாக இருந்திருக்கலாம்.

ஆனால், இன்று ஜே.வி.பியினர் இந்தியா சென்றுள்ளமை இலங்கையின் அரசியலில் பெரும் தாக்கத்தை விளைவிக்கும் என்பதிலும் சந்தேகத்திற்கு இடமில்லை. அத்தோடு, சிறிலங்கா அரசாங்கத்திற்கு நெருக்கடிகள் அதிகரிக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

அதேவேளை, ஜே.வி.பியினருக்கும் புதிய உறவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உருவாகியுள்ளன. அந்த உறவுகள் இந்திய மண்ணில் இருந்து யாருடன் ஏற்படினும், ஜே.வி.பி. புதுவடிவம் பெறப்போவதும், சிறிலங்கா அரசியலில் அழிக்கமுடியாத சக்தியாக ஜே.வி.பி. மாறப்போவது மட்டும் உண்மை.

### யாழ். போதனா வைத்தியசாலையில்

## நோயாளர் பராமரிப்போர் 50 வீதத்தினால் குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் உள்ள நோயாளர் பராமரிப்பாளர் தொகை முன்பு இருந்ததைவிட ஐம்பது வீதத்தால் குறைந்துள்ளதாக வைத்தியசாலை மேற்பார்வையாளர் தெரிவித்தார்.

கடந்த காலயுத்த நிலைமையால் வீட்டில் தங்கியவர்கள் மீண்டும் தமது கடமைகளுக்குதிரும்பவில்லை என்றும் 503 பராமரிப்பாளர்களைக் கொண்ட இந்த வைத்தியசாலைக்கு 260 பேர் மட்டுமே இப்பொழுது கடமையாற்றுவதாக அவர் குறிப்பிட்டார்.

(லோ)

## நடமாடும் இரத்ததான சேவை

டாக்டர் **சீர்மாறன்**

'இரத்ததானம்' செய்வது அதுவும் இன்றைய போர்க் கால சூழ்நிலையில் விமானக் குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல், துப்பாக்கிச்சூடு போன்றவற் றால் காயப்படுபவர்களுக்கு மிக முக்கியமான பிரச்சினை யாக குருதிப்பெருக்கு ஏற்படுவதால் இரத்ததானம் செய்ய முன்வரவேண்டியது அத்தியாவசியமானதொன்று மட்டுமல்ல, ஒவ்வொருவருடைய கடமையுமாகும் என்றால்கூட அது மிகையாகாது. ஏனெனில ஆஸ்பத்திரியின் இரத்த வங்கியில் போதுமானதளவு இரத்தம் கையிருப்பில் இருக்கும்போது காயப்பட்டு வருகின்றவர்களின் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டும் அதே போன்று இரத்த வங்கியில் இரத்தம் மிகக்குறைவாகசில வேளைகளில்அறவே இல்லாத போது காயப்பட்டு வருகின்ற சில உயிர்கள் மருத்துவ ரீதியாக காப்பாற்றப்படக்கூடிய நிலை இருந்தும் அநாவசியமாக உயிர்இழப்பு ஏற்பட்ட துர்பபாக்கியமான 'உண்மை' பலரும் அனுபவ ரீதியாக அறிந்த உண்மையே!

மனித உடலிலுள்ள செங்குருதிக் கலங்களின் வாழ்க்கைச்சக்கரம் 120 நாட்களே யாகும். 120 நாட்களின்பின்பு அவை ஈரலில் அழிக்கப்படுகின்றன. அழிக்கப்படுகின்ற ஒவ்வொருசெங்குருதிக்கலமும் எலும்புத்தொகுதியின் மச்சையில் புதிதாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறுஒவ்வொருநாளும் 100 இலட்சம் கலங்கள் ஈரலில் அழிக்கப் பட்டு அவை எலும்புத்தொகுதியின் மச்சையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இது மனித உடலில் நடைபெறுகின்ற சாதாரணமான செயற் பாடுகளில் ஒன்று.

எனவே இரத்ததானம் செய்தவுடன் ஏற்கனவே 100 லட்சம் கலங்களை உற்பத்தி செய்கின்ற எலும்புமச்சை சற்று கூடுதலாக கொஞ்ச செங்குருதிக்கலங்களை உற் பத்தி செய்து நிலைமையை சரி செய்யும். எனவே ஒருவரின் ஒரு 'பைன்ட்' இரத்தம் இன்னொருவரின் உயிரைக்காப்பாற்றும். அப்படிச் செய்யாதவர்களின் குருதி விரும்பியோ விரும்பாமலோ உடலுக்குள் அழிக்கப்படுகின்றன.

எங்கேயோ யார்வீட்டிலோ விழுகின்ற ஷெல்லினாலும் குண்டினாலும்காயப்படுகின்றவர்களுக்கு நாம் ஏன் இரத்த தானம் செய்து காக்க வேண்டும்? என்கிற மனநிலை இன்னும் நிலவுமாக இருந்தால் பலரின் உயிர்கள் இன்னும் அநாவசியமாக இழக்க நேரிடும். மாறாக எங்கோ விழுந்த ஷெல்லும், குண்டும் நாளை என்வீட்டிலும், றோட்டிலும், என் தலையிலும் விழுந்து காயப்படும்போது என்னைக் காப்பாற்றவும் இன்னொருவரின் இரத்தம்தானதேவைப் படப்போகிறது என்கிற ஆரோக்கியமானமனோநிலையோடு முன்னெச்சரிக்கையாக ஒவ்வொருவரும் இரத்தானம் செய்வார்களாயின் ஆஸ்பத்திரியின் இரத்த வங்கியில் போதியளவு இரத்தம் கையிருப்பில் இருக்கும் போது பல உயிர்களைக் காப்பாற்ற முடியும். எனவே ஒவ்வொருவரும் பொறுப்புணர்ச்சியோடு தமது பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

இரத்ததானம் செய்வதற்கு யாழ் போதனா வைத்தியசாலைக்கு எந்தநேரமும் செல்லலாம். ஆனாலும் காலை 9மணியிலிருந்துமாலை 4மணி வரை மிகவும் சிறந்ததாகும். தானம் செய்யப்படுகின்ற இரத்தம் அது இன்னொருவருக்குப் பயன்படுகின்றவரை அதற்குரிய விசேட குளிர்சாதனப்பெட்டியில் பாதுகாக்கப் படல்வேண்டும். மின்சாரவசதி குறைந்த இன்றைய சூழ்நிலையில் ஜெனரேட்டர் மூலம் வழங்கப்படுகின்ற மின்சாரம் மூலமே இச்சேவை செய்யப் படுகிறது.

இரத்ததானம் செய்வோர்களின் சௌகரியம் கருதி, முன்பு பாடசாலைகள், சனசமூகநிலையங்கள், மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கு விசேட அம்புலன்ஸில்சென்று இரத்தம்சேகரித்ததுஉண்மை. அதற்கு குறைந்தது ஒன்று அல்லது இரண்டு டாக்டர்கள், இரண்டு தாதிகள், ஊழியர்கள் தேவை. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அதுவும் 'குளிர்சாதனப்பெட்டி' பொருத்தப்பட்ட விசேட ''அம்புலன்ஸும்'' இல்லாத நிலையில் நடமாடி இரத்தம் சேகரிப்பது மிக கடினமானது மட்டுமல்ல முடியாத காரியமுமாகும். ஏனெனில் உதாரணத்திற்கு இருபத்தைந்து பேர் இரத்ததானம் செய்யத் தயாராக இருக்கின்ற ஒரு இடத்திற்கு போகும்போது ஒருவரிடமிருந்து இரத்தம் ஒரு பைன்ட் எடுக்க ஏறக்குறைய 10-15 நிமிடங்கள் எடுக்கும். எனவே இருபத்தைந்தாவது ஆளிடம்குருதி எடுக்கும்போது ஆறுமணித்தியாலங்கள் சென்றுவிடும். குளிர்சாதனப்பெட்டியும், மின்சார வசதியுமில்லாத இன்றைய சூழ்நிலையில் அவ்வளவு இரத்தமும் வீணாகிவிடும்; பழுதடைந்துவிடும். எனவேதான் நடமாடும்சேவை இன்றைய சூழ்நிலையில் செய்ய முடியாதுள்ளது.

இதற்கு மாற்றீடாக இரத்த தானம் செய்ய விரும்புவோர் சைக்கிளில் ''யாழ். போதனா வைத்தியசாலைக்குவந்து, அரைமணிநேரம்இளைப்பாறிவிட்டு இரத்ததானம் செய்த பின்னர் மீண்டும் ஒரு அரை மணிநேரம் ஓய்வு எடுத்துவிட்டு ஆறுதலாக வீட்டுக்குப் போகலாம். இதில் எந்தவித ஆபத்துமில்லை. அல்லது ஒரு ஊரில் இருபதுபேர் இரத்த தானம் செய்யத்தயாராக இருந்தால் முதல்நாள் பத்துப் பேர் மற்றைய பத்துப்பேரை சைக்கிளில் கூட்டிக்கொண்டு வந்து மறுநாள் எஞ்சியபத்துப் பேர், பத்துப்பேரைக் கூட்டிக் கொண்டு வந்து 'இரத்ததானம்' செய்யலாம்.

மனமும் முயற்சியுமிருந்தால் எவ்வளவோ செய்யலாம்.

## மத்திய புலனாய்வுத் துறையிடம் போபோர்ஸ் பேர ஆவணங்கள்

(டில்லி)

போபோர்ஸ் பேர ஊழல் தொடர்பான ஆவணங்களை சுவிஸில் உள்ள இந்திய தூதுவராலய அதிகாரிகள் மத்திய புலனாய்வுத் துறையிடம் (சி.பி.ஐ) ஒப்படைத்துள்ளது.

இதற்கு முன்னதாக இந்த மாதம் 5ஆம் திகதி சுவிஸின் நீதித்துறையையும், பொலிஸ் துறையையும் சேர்ந்த அதிகாரிகள் இந்த ஆவணங்களை சுவிஸில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகரிடம் கையளித்திருந்தனர்.

இந்த ஆவணங்களை தருமாறு முன்னாள் பிரதமர் வி.பி. சிங் காலத்தில் பெப்ரவரி 7ஆம் திகதி டில்லி சிறப்பு நீதிபதி அகர்வால் சுவிஸ் அரசாங்கத்திடம் கேட்டிருந்தார்.

இதன் பிரகாரம் சி.பி.ஐ. அதிகாரிகள் இந்த ஆவணங்களை முதலில் நீதிமன்றத்திடம் ஒப்படைத்ததன் பின்னரே விசாரணைகளை தொடர்வோம் எனத் தெரிவித்துள்ளது.

## பொதுக் கூட்டம்

வடபிராந்திய முச் சக்கர மோட்டார் வண்டி ஊழியர்களின் சங்கப் பொதுக்கூட்டம் நாளை 16ம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு யாழ்ப்பாணம் 39 / 12 மின்சார நிலைய வீதி. 3ம் ஒழுங்கையில் நடைபெறவுள்ளது. அங்கத்தினர் அனைவரும் தவறாது சமுகமளிக்குபடி மேற்படி சங்க தலைவரால் வேண்டப்படுகின்றனர்.

## வட - தென் கோரிய இணைப்பு; பேச்சுவார்த்தையில் தடங்கல்

(சோல்)

இரு கொரியாவும் இணைவது குறித்து நடத்தப்பட்ட பேச்சுக்கள் உடன்பாடு இல்லாமலேயே முடிவுற்றதாக கூறப்படுகிறது.

கடந்த மூன்று நாட்களாக தென்கொரியாவில் இருகொரியாக்களின் பிரதமமந்திரிகளும் சந்தித்து இணைவது குறித்து பேச்சுக்கள் நடத்தினர்.

ஆனால் இணக்கம் ஏதுமின்றிப் பேச்சுக்கள் முடிவடைந்ததாக கூறப்படுகிறது. போரிலக்கு உடன்படிக்கையில் முதலில் கைச்சாத்திட வேண்டும் என வடகொரியப் பிரதமர் ஜான் வலியுறுத்திய அதேவேளை தகவல்தொடர்பு மற்றும் வர்த்தகத்துறை குறித்தே முதலில் உடன்படிக்கை செய்யவேண்டும் என தென்கொரியப் பிரதமர் கான் வலியுறுத்தினார்.

## கப்டன் பாரத் அஞ்சலிக் கூட்டம்

(மானிப்பாய்)

இந்திய, இலங்கை ஆக்கிரமிப்புப் படைகளுக்கெதிராக திரத்துடன் இறுதிவரை போராடி வீரமரணமடைந்த கப்டன் பாரத் என்ற போராளியின் மூன்றாம் ஆண்டு அஞ்சலிக் கூட்டம் பிரதேசப் பொறுப்பாளர் சங்கர் தலைமையில்கடந்த9-ம்திகதிமானிப்பாயில்நடைபெற்றது. இந்த அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்கள் திரு.பரா, மகளிர் பிரிவு பிரமுகர் செல்வி சித்திரா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (க)

# கிராமிய வங்கிகளுக்கு ரூ. ஒரு கோடி வழங்க அரச அதிபர் உத்தரவாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமிய வங்கிகளுக்கு ஒரு கோடிரூபா பணம் வழங்க யாழ். அரச அதிபர் உத்தரவாதம் தந்துள்ளதாக யாழ். செயலக ஓய்வூதியக் கிளைக் கணக்காளர் நாயகம் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியதாவது யாழ். மாவட்டத்தில் கிராமிய வங்கிகளில் கணக்குவைத்திருக்கும் ஓய்வூதியர்களுக்கு கடந்தபலமாதங்களாக எதுவித கொடுப்பனவும் செய்யாததால் அவர்கள் பெரும் கஷ்டநிலையை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையைக் குறைத்துக் கொள்வதற்காக இந்த ஒருகோடி ரூபாவையும் யாழ் அரச அதிபர் ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்காக தருவதாக தமக்கு உறுதி கூறினார் எனவும் அவர் தெரிவித்தார்.

### தொலைத்தவர்களினால் தொல்லை

ஓய்வூதிய தாரர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட 'ஓய்வூதிய வவுச்சர்' களை அவர்கள் தொலைத்துவிட்டு வங்கிகளில் பணம் எடுக்கமுடியாத நிலையில்செயலகத்திற்குவந்து தமக்குத் தொல்லை தருவதாகவும் இவர்கள் தமது வவுச்சர்களை தொலைத்தால் பெரும் தொல்லைகளுக்கு ஆளாவது தவிர்க்கமுடியாததாகிவிடும்என்றும் பிரதிவவுச்சர் எடுக்க விரும்பும் ஓய்வூதியர் நிச்சயமாக வங்கி முகாமையாளரிடம் இருந்து கடிதம் பெற்றுவந்தாலே இந்த பிரதிவவுச்சர் வழங்கப்படும் எனவும் கணக்காளர் தெரிவித்தார்.

### இனிமேல் இலங்கை வங்கியில்

செயலகத்தில் புகையிரத ஊழியர்களின் ஓய்வூதியம் வழங்கும் நடைமுறைபற்றி அவர் குறிப்பிடுகையில் இவர்களுடைய ஓய்வூதியப்பணம் யாழ். வைத்தியசாலை இலங்கை வங்கிக்கிளையில் வழங்கப்படும் என்று சொன்னார்.

## கிளியால் ஓடிய சிறுவன் கிடங்கினுள் காயம்

(பளை)

நேற்றுக் காலை இரண்டு முறை பளையில் குண்டுவீச்சு விமானங்கள் வட்டமிட்டன பயந்து ஓடிய சிறுவன் கிடங்கினுள் வீழ்ந்து காயமடைந்தார்.

காலை ஒன்பது மணிக்கும் பதினொரு மணிக்குமாக இரண்டுமுறை மாச்செட்டிரக விமானங்கள் வட்டமிட்டதால் பளை வியாபாரிகள் கடைகளை பூட்டிவிட்டுதப்பி ஓடிவிட்டனர். பளை நகர்ப் பகுதியில் நின்ற ச. நிமால்கரன் என்ற 14 வயது சிறுவன் புகையிர நிலைய கிடங்கு ஒன்றினுள் வீழ்ந்ததில் காலில் பலத்த காயத்துக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (லோ)

## மட்டக்களப்பு மாணவருக்கும் பலாலி கலாசாலையில் இடம்

(கோப்பாய்)

மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மாணவர்களுக்கும் பலாலி ஆசிரியப் பயிற்சிக்கலாசாலையில் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள பல மாணவர்களுக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் செயற்பட ஆரம்பித்திருக்கும் பலாலி ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையில் தற்காலிக அனுமதி வழங்கப் பட்டிருக்கிறது. (க)

## விசேட பொதுக்கூட்டம்

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டமொன்று நாளை காலை 9.30மணிக்கு நீர்வேலி சமாசத் தலைமைச் செயலகத்தில் நடைபெற இருக்கிறது. வரவு – செலவுத் திட்டம் பற்றியும் இங்கு ஆராயப்பட இருப்பதால் சகல அங்கத்தவ சங்கங்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமுகம் கொடுக்கும்படி தலைவர் அழைப்பு விடுத்துள்ளார்.

### உள்ளூர்

கோண்டாவில் கலைகலாசாரப் பிரிவுச் செயலகத்தில் ஒப்படைத்து அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கலைகலாசாரப்பிரிவினர் அறிவித்துள்ளனர். (க)

## சமுகம் தரவும்

ஆனையிறவு உப்புக்கூட்டுத் தாபனத்தில் வேலை செய்து தற்சமயம் கிளிநொச்சிமாவட்டத்தில் தங்கி இருக்கும் ஊழியர்களைஎதிர்வரும்17ம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பரந்தன் முரசுமோட்டையில் இயங்கும் மக்கள் வங்கிக் கட்டடத்தில் வடபிரந்திய முகாமையாளரைச் சந்தித்து கலந்துரையாட சமுகந்தரும்படி உதவி உற்பத்தி முகாமையாளர் கேட்டுள்ளார்.

### உழவு இயந்திரம்

ண்டபோதிலும் ஆர். செல்வரெத்தினம் (கிளிநொச்சி 40 வயது), க அலோசியஸ் (பாரதிபுரம் 35 வயது), ஐ. தவப்பிரகாசம்(தருமபுரம் 22வயது) ஆகியோர் படுகாயமடைந்தனர். வாகனத்துக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை (85)

### தாய், சேய்

நலன்கள் முற்றாகக் கவனிக்கப்படாமல் இருந்தமையால் இந்தப்பகுதியில் சிசுமரணம், கர்ப்பிணித்தாய்மாரின் மரணம், நிறைகுறைந்த சிசு பிரசவித்தல் போன்ற பல்வேறு குறைபாடுகள் இருந்துவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (க)


## சிவபதமடைந்தார்

திருப்புகழ் திலகம் இணுவையூர்

### வை. தியாகராசா சுவாமிகள்

(தில்லை நடராசா)

திருப்புகழ் திலகம் இணுவையூர் வை தியாகராசா சுவாமிகள் 14 - 12 - 90 வெள்ளிக்கிழமை மாலை 6 மணி அளவில் சிவபதமடைந்தார். இவருடைய சமாதிக் கிரியைகளும், ஆராதனைகளும் 16 - 12 - 90 ஞாயிற்றுக் கிழமை பகல் 12 மணியளவில் காரைக்கால் மயானத்தில் அடியார்கள், சிஷ்யர்கள் முன்னிலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

''குரு இல்லம்'' இணுவில் கிழக்கு. — தியாக சத்திய சிவன சன்மார்க்க இயக்கம்.

(R/929)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அரச சார்பற்ற நிறுவனங்கள் புனர்வாழ்வு பற்றித் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில்உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் தாம் ஒன்று சேர்ந்து தீர்மானித்து தமது பொறுப்பில் தனித்தனியே குறிப்பிட்ட பிரதேசங்களில் தாமே புனர்வாழ்வு வேலைகளில் ஈடுபடும் என்றும், அவை தாம் இத் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொண்ட பிரதேசங்களை யாழ். அரச அதிபருக்கு தெரிவிக்கும் எனவும் யாழ். அரச அதிபர் நேற்று தெரிவித்தார்.

இத் தீர்மானம் நேற்று யாழ் செயலகத்தில் இடம் பெற்ற ஒரு கூட்டத்தில் எடுக்கப்பட்டது. (லோ

### அரச சார்பற்ற

அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் செயற்பாடுகள பற்றியும், அவற்றின் நிதி மூலங்கள் பற்றி ஆராயப்படவுள்ளது. வெளிநாட்டு மூலங்களில் இருந்தும். உள் நாட்டிலிருந்தும் பெறப்பட்ட நிதியின் ஒரு பகுதி தேசிய பாதுகாப்பிற்கு அல்லது பொது ஒழுங்கிற்கும் அல்லது தவறான நடவடிக்கைகளுக்கு அல்லது பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளுக்கு அல்லது இலங்கை மக்களின் இன, மத, கலாசார சமுக நிலையைப் பேணுவதற்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதாக அல்லது தவறாக கையாளப்படுவதாக தெரியவருகின்றது.

இலங்கையில் தற்போது செயலாற்றிவரும் உள்ளூர், வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளையும், அவற்றிற்கு நிதி வழங்கப்படுவதையும், விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவினர் கேட்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய நிறுவனங்களின் செயற்பாடுகளையும், நிதி வழங்கப்படுவதையும் கண்காணிப்பதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் ஏற்கனவே பிரகடனப்படுத்தப்பட்ட சட்டங்கள் எவையேனும் இருந்தால் அவைபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும் ஆணையாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே அமுலில் இருக்கும் நிறுவன ஒழுங்குகளை ஆராய்வதும் அவர்களது கடமையாகும். வெளிநாடுகளிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் பெறப்படும் நிதி வேறாகக் கையாளப்படுகிறதா, தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் ஆணைக்குழு ஆராயும். இது தொடர்பாக தற்போதுள்ள சட்டத்தின் ஏற்பாடுகள் போதுமானவையா என்பதையும் ஆணைக்குழு ஆராயும்.

முன்னாள் உயர்நீதி மன்ற நீதியரசர் ஆர். எஸ். வனசுந்தர இதன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### பருத்தித்துறைக்கு

ப்பைப் பொறுத்து வழங்கப்படும். 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை முன்னுரிமை அடிப்படையில் 150 பேருக்கு 1000 ரூபா வரையில் பணமாக வழங்கப்படும்.

நெல்லியடிக் கிளையில் 17 ஆம் திகதி ஓய்வூதியகாரருக்கு 1500 ரூபா வரையில் பணமாக வழங்கப்படும். 18 ஆம் திகதி முதல் சகல பணக் கொடுப்பனவுகள் தொடர்பான அறிவித்தல்கள் அந்தந்த திகதிகளில் வங்கியின் அறிவித்தல் பலகையில் அறிவிக்கப்படும். இவ்வாறு இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார். (க)

### 20 பேருக்கு

இருபது பேருக்கு மட்டுமே போதுமானதாகும் எனவும் பணிப்பாளர் தெரிவித்தார்.

### அதிகாரிகள் கூற்று என்ன ஆச்சு

இறுதியாக மருந்துத் தட்டுப்பாடுகள் பற்றி எடுத்துச் சொன்ன பணிப்பாளர் யாழ் போதனா வைத்தியசாலையில் தட்டுப்பாடாக உள்ள சில முக்கிய மருந்துப்பொருள்களுக்கு பெயர் குறிப்பிட்ட துண்டு கொடுத்துவிடப்படுகிறது. இந்த துண்டுகளில் குறிப்பிட்ட மருந்துப் பொருளை வைத்தியசாலைக்கு வெளியே மருந்துக்கடைகளில் மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டி உள்ளது. ஆனால் இந்த மருந்துப் பொருள்கள் எவையும் வெளி மருந்துக் கடைகளில் இல்லை. மூன்று மாதங்களுக்கு முன்னர் சில அதிகாரிகள் யாழ். மாவட்டத்தில் உள்ள மருந்துக்கடை உரிமையாளர்களுக்குமருந்துப் பொருள்கள் பெற்றுத்தரப் போவதாக கூறி இருந்தனர். ஆனால் இதுவரை எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

### அரச நிதி

பணம் போதுமானதாக இருக்காது இவ்வாறு வைத்திய சாலையின் கணக்காளர் தெரிவித்தார்.

ஏனெனில் போர்க்காலச் சூழ்நிலையில் மருந்துப் பொருள்களின் தேவை அதிகமாவதனாலும், மருந்துப் பொருள்களின் விலை உயர்வதுமே இந்தப் பற்றாக்குறை ஏற்படுவதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டது. (க)

## நாய்களுக்கு விசர் தடுப்பூசி

(நல்லூர்)

வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களுக்கு விசர் வராமல் தடுக்க தடுப்பூசிபோடுவதென யாழ். பிராந்திய சுகாதார திணைக்களத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை சுகாதார வைத்திய அதிகாரியின் முயற்சியால் இதுவரை 229 கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப் பட்டுள்ளன. (85)

## வடமராட்சியில் நாய்கள் பிடிப்பு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் கட்டாக்காலி நாய்களை பிடிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் பலரும் தாமாகவே முன்வந்து ஒத்துழைப்பு நல்கி வருவது குறிப்பிடத்தக்கது. (13)

## கசிப்பு மீது கடும் நடவடிக்கை

கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட சிலர் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருப்பதாகவும், கசிப்பு உற்பத்தியைத் தடுக்கும் நடவடிக்கைகள் மேலும் விரிவு படுத்தப்படும் என்றும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

## விற்பனைக்கு

'இந்தமண் எங்களின் சொந்தமண்' ஒலிப்பதிவு நாடா 'ஈழநாதம்' அலுவலகத்தில் தற்போது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' ஒலிப்பதிவு நாடாவும் இங்கு விற்பனைக்குவைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே

## 8 ஆவது அஞ்சலிக் கூட்டம்

அமரர் க. கைலாசபதியின் 8 ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ...ப்பன் கோட்டத்தில் நடைபெறும்.

''மல்லிகைப் பந்தலினால்'' ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இத்தக கூட்டத்திற்கு பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் தலைமை வகிப்பார். கவிஞர் இ. முருகையன் சிறப்புச் சொற் பொழிவு நிகழ்த்துவார்.

## பயிலுநர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பயிலுநர் ஆசிரியர் சங்க விசேட கூட்டம் நாளைஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணியளவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

## சிகிச்சை நிலையம் இடமாற்றம்

கோப்பாயில் இயங்கிவரும் மார்புநோய்ச் சிகிச்சை நிலையம் யாழ். நகருக்கு மாற்றப் பட உள்ளது.

இந்தமாதம் முடிவிற்குள் மேற்படி சிகிச்சைநிலையத்தை யாழ் நகருக்கு மாற்றுவதற்கு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். (க)

### 240 தபால்

பருத்தித்துறைக்கு பிரத்தியேகமாகவந்தவையாகும். இந்த தபால்கள் எதிர்வரும் திங்கட்கிழமை விநியோகிக்கப் பட உள்ளதாகத் தெரிகிறது. (85)